## 7.11 ஊராட்சித் தேர்தல் பணிகள் கவனிக்க ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்ககம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் தோற்றுவித்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண்.54 நாள் : 14.6.2006

படிக்க :

இயக்குநர், ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி (சி4) துறை கடிதம் எண். 359/2006/ஒப்தியம்–5, நாள் : 18.5.2006.

**ஆணை**

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் தமிழ்நாட்டில் உள்ள மூன்று நிலை ஊராட்சிகளின் அமைப்புகளுக்கு சாதாரணத் தேர்தல் 2006ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது என்று தெரிவித்துள்ளார். 2006 அக்டோபர் மாதம் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் பணிகளைக் கவனிக்க கீழ்காணும் பணியிடங்களைத் தோற்றுவிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வரிசை எண் | | பதவியின் பெயர் | பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| அ) | | ஊரக வளர்ச்சி இயக்ககம் | | |
| | 1. | உதவி இயக்குநர் | 1 | 8000–275–13500 |
| | 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 | 6500–200–10500 |
| | 3. | உதவியாளர் | 3 | 4000–100–6000 |
| | 4. | கணினி இயக்குபவர் | 1 | ரூ. 5,000 தொகுப்பூதியம் அடிப்படையில் |
| ஆ) | | மாவட்ட ஆட்சியர் ஆலுவலகம் (வளர்ச்சி பிரிவு) | | |
| | 1. | மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர் | 29 | 8000–275–13500 |
| | 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் (விழுப்புரம் மாவட்டத்திற்கு | 29+1 | 6500–200–10500 ஒரு கூடுதல் பணியிடம்) |
| | 3. | உதவியாளர் (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | 29+1 | 4000–100–6000 |
| | 4. | கணினி இயக்குபவர் (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | 29+1 | ரூ. 5,000 தொகுப்பூதியம் அடிப்படையில் |
| இ) | | ஊராட்சி ஒன்றியங்கள் | | |
| | 1. | உதவியாளர் | 385 | 4000–100–6000 |
| | 2. | கணிணி இயக்குபவர் | 385 | ரூ. 5,000 |

தொகுப்பூதியம் அடிப்படையில்

2. மேற்காணும் பணியிடங்கள் தற்போதுள்ள மாவட்டங்கள்/ ஊராட்சி ஒன்றியங்களின் ஊராட்சிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். மேலும் விழுப்புரம் மாவட்டம் 22 ஊராட்சி ஒன்றியங்களையும், 1104 ஊராட்சிகளையும் கொண்ட மிகப் பெரிய மாவட்டம் என்று தெரிவித்துள்ளார். ஆகவே மேற்குறிப்பிட்ட பணியிடங்களை 1.6.2006 முதல் ஒராண்டு காலத்திற்குத் தோற்றுவித்து ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசைச் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 7. PANCHAYAT ELECTIONS

3. ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பி வைத்த செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதன்பின் கீழ்குறிப்பிட்ட பணியிடங்களை 1.6.2006 முதல் 31.12.2006 வரை தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண் | | பதவியின் பெயர் | பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| அ) | ஊரக வளர்ச்சி இயக்ககம் | | | |
| | 1. | உதவி இயக்குநர் | 1 | 8000–275–13500 |
| | 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 | 6500–200–10500 |
| | 3 | உதவியாளர். | 3 | 4000–100–6000 |
| | 4. | கணினி இயக்குபவர் | 1 | ரூ. 5, 000 தொகுப்பூதியம் அடிப்படையில் |
| ஆ) | மாவட்ட ஆட்சியர்அலுவலகங்கள் (வளர்ச்சி பிரிவு) (சென்னை நீங்கலாக) | | | |
| | 1. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் | 29 | 8000–275–13500 |
| | 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் (விழுப்புரம்) மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | 29+1 | 6500 200 10500 |
| | 3. | உதவியாளர் (விழுப்புரம்)மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | 29+1 | 4000–100–6000 |
| | 4. | கணினி இயக்குபவர் (விழுப்புரம்) மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | 29+1 | ரூ. 5, 000 தொகுப்பூதியம் அடிப்படையில் |
| இ) | ஊராட்சி ஒன்றியங்கள் | | | |
| | 1. | உதவியாளர் | 385 | 4000–100–6000 |
| | 2. | கணினி இயக்குநர் | 385 | ரூ. 5, 000 தொகுப்பூதியம் அடிப்படையில் |

4. மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

| | |
|---|---|
| 2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் நெறிப்படுத்தலும் நிருவாகமும் | (ரூபாய்) |
| 1. திட்டத்தில் சேராதது | |
| A.A ஊரக வளர்ச்சி இயக்கம் | |
| 01. சம்பளங்கள் (த.தொ. கு. எண்.2515.00.001 AA–0100) | 4,45,935 |
| 33.04. ஒப்பந்த ஊதியம் (த.தொ. கு. எண்.2515.00.001 AA–3349) | 35,000 |
| | 93,32,095 |

| | |
|---|---|
| AC மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வளர்ச்சிப் பணியாளர்கள் | |
| 1. சம்பளங்கள் | |
| (து.தொ. கு. எண்.2515.00.001 AC–0106) | 93,32,095 |
| 33.0 ஒப்பந்த ஊதியம் | |
| (து.தொ. கு. எண்.2515.00.001 AC.3345) | 10,50,63,500 |
| AE. வளர்ச்சி வட்டார தலைமையிடங்கள் | 2,50,63,500 |
| 01 சம்பளங்கள் | |
| (து.தொ. கு. எண்.2515.00.001 AE. 0102) | |
| 33.04. ஒப்பந்த ஊதியம் | 1,34,75,000 |
| (து.தொ. கு. எண்.2515.00.001 AE. 3341 | 4,94,01,520 |

5. ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரும் மாவட்ட ஆட்சித் தலைவர், அலுவலகங்களில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக (தேர்தல்) உதவியாளர்களும் ஊராட்சி ஒன்றியங்களில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் ஊதியம் மற்றும் படிகளுக்கான பட்டியல்கள் தயாரித்து ஏற்பளிப்பு வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறார்கள்.

6.மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவினம் புதுப்பணியாகும் (New Service) இச்செலவினத்திற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணிடங்களுக்கான செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BG.I) துறையினால் தனியே வெளியிடப்படும் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினத் திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதித் (B.G.I.) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. 2006–2007– ஆம் ஆண்டிற்கான வரவு செலவுக்கான கருத்துருவினை அனுப்பும்போது இந்நேர்வினை துணை மதிப்பீட்டில் (Suppiementary Estimate) சேர்ப்பது குறித்து உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அலுவல சார்பற்ற குறிப்பு எண்.1746/F/S/P/ 2006 நாள் 13.6.2006 மற்றும் கூ.பே. எண் 148ல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வரதன் ஷெட்டி**
அரசு செயலாளர்